தமிழ் முரசு 19 6 2007 செவ்வாய்

# அறியாமையைப் போக்கும் நல்லிணக்க நிலையம்



பெரித்தா ஹரியான்

பீஷானில் அன் நஹ்தா பள்ளிவாசலில் அமைந்திருக்கும் நல்லிணக்க நிலையத்தை அதிபர் நேற்று பார்வையிட்டார். அதிபருக்கு அருகில் (வலப்புறம்) முயிஸ் எனப்படும் இஸ்லாமிய சமய மன்றத்தின் தலைவர் அலாமி மூசா. “இந்த நிலையத்தின் மூலம் இஸ்லாத்தைப் பற்றிய கருத்துகள் சிறு குழந்தைகளுக்குக்கூட மிகத் தெளிவான முறையில் போய்ச் சேரும். மற்ற சமயத்தவரும் இஸ்லாத்தைப் பற்றிய அடிப்படை விவரங்ககளை நன்கு அறிந்துகொள்ள இந்த நிலையம் உறுதுணையாக விளங்குகிறது“ எனப் புகழ்ந்த அதிபர் திரு எஸ் ஆர் நாதன் கூறினார்.

**முனிரா சக்காரியா**

பயங்கரவாத மிரட்டல் பெரிய அளவில் இருக்கும் ஓர் உலகத்தில் குற்றச்செயல் என்பது வேறுபட்ட ஒன்றாக இருக்கிறது என்று அதிபர் எஸ் ஆர் நாதன் தெரிவித்து இருக்கிறார்.

பீஷானில் அன்- நஹ்தா பள்ளிவாசலில் அமைந்துள்ள சமய நல்லிணக்க நிலையத்திற்கு நேற்று அதிபர் முதன் முறையாகச் சென்றார்.

நிலையத்தைச் சுற்றிப் பார்த்த அதிபர், கணினி இணையம் மூலமாக சுய தீவரவாதியாக மாறி இப்பொழுது தடுப்புக் காவலில் இருக்கும் அப்துல் பசீர் அப்துல் காடேர்(28) பற்றி செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

செயல் ரீதியில் எந்தக் குற்றச் செயலையும் அப்துல் பசீர் செய்திருக்கவில்லை என்றாலும் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்.

அவர் கைது செய்யப்பட்ட பொழுது ஆப்கானிஸ்தானில் தீவிர ஜிஹாத் போராட்டத்தை தொடங்குவதற்கான திட்ட வட்டமான திட்டங்கள் அவரிடம் இருந்தன. பயங்கரவாதம் என்பது ஒரு வகையான குற்றச் செயல். அதை மெய்ப்பிப்பது எளிதல்ல என்று அதிபர் சொன்னார்.

அன்-நஹ்தா பள்ளிவாசலில் அமைந்திருக்கும் நல்லிணக்க நிலையத்தின் பணிகள் பற்றி குறிப்பிட்ட நாதன், இஸ்லாமியர்கள் பயங்கரவாதிகள் என்று மக்களிடம் நிலவும் அறியாமையை இந்த நிலையம் போக்குகிறது என்று குறிப்பிட்டார். நல்லிணக்க நிலையம் 2006 அக்டாபரில் அமைக்கப்பட்டது.

இஸ்லாத்தின் உண்மையான பொருளை நன்கு புரிந்து கொள்ளுமாறு செய்வதோடு அனைத்துச் சமங்களுக்கிடையில் கலந்துரையாடல் நடக்க ஆவன செய்துவருகிறது. இந்த நிலையம் திறக்கப்பட்டது முதல் பல்வேறு சமூகங்கள், சமய அமைப்புகள் கல்வி நிலையங்கள் வெளிநாட்டினர் உள்ளிட்ட 4,400 வருகையாளர்கள் இந்த நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.